Office of the Deputy Director of L. F.
1099
25 JUL 1997

நகல்:

<u>தமிழ்நாடு அரசு</u>

<u>சுருக்கம்</u>

திட்டப் பணிகள்-நகர்மன்றங்களுக்கும், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்கள் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் ஆகியோருக்கும் உள்ள திட்டப் பணிகளுக்கு நிருவாக அனுமதி வழங்கும் அதிகார வரம்பு-உயர்த்தி ஆணை வெளியிடப்படுகிறது.

- - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி3) துறை

அரசாணை நிலை எண்.54, நாள்:28.2.1997

பார்வை:

1. அரசு ஆணை நிலை எண்.1205, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை, நாள்:30.6.1981.
2. அரசு ஆணை நிலை எண்.460, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்: 28.4.88.
3. அரசு ஆணை நிலை எண்.2, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை, நாள்: 4.1.1993.
4. அரசு ஆணை (2டி) எண்.154, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்: 11.11.1996.
5. நகராட்சி நிர்வாகஇயக்குநரின் கடிதம் எண்.22259/96,டிபி3, நாள்: 18.2.1991.

****

<u>ஆணை:</u>

பார்வை 1 மற்றும் 2-ல் படிக்கப்பட்ட அரசாணைகளில் முறையே நகராட்சி நிதியைக் கொண்டும் அரசு நிதியைக் கொண்டும் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கும் அதிகார வரம்பு குறிப்பிடப்பட்டுள்ளது. பார்வை-3ல் படிக்கப்பட்ட அரசாணையில் மேற்படி அதிகார வரம்பு உயர்த்தப்பட்டது. பார்வை 4-ல் படிக்கப்பட்ட அரசாணையில் அரசு நிதியைக் கொண்டு மேற்கொள்ளப்படும் திட்டப் பணிகளுக்கு நகராட்சி நிர்வாக இயக்குநரின் நிருவாக அனுமதி வழங்கும் அதிகார வரம்பு ரூ.8.00 லட்சமாக உயர்த்தப்பட்டது.

2. பார்வை 5-ல் கண்ட கடிதத்தில் நகராட்சி நிர்வாக இயக்குநர், 1992ம் ஆண்டு அரசமைப்புச் சட்டம் 74-வது திருத்தச் சட்டத்தின் காரணமாகவும் மாநில நிதி குழுவின் பரிந்துரைகள் மற்றும் நகராட்சிப் பணிகளை மேற்கொள்வதற்கு தேவையான பொருட்களின் விலையேற்றம் ஆகியவற்றை கருதி நகர்மன்றங்களுக்கும், நகராட்சி நிர்வாகப் மண்டல இயக்குநர்களுக்கும், நகராட்சி நிர்வாக இயக்குநருக்கும், நகராட்சி நிதியைக் கொண்டு மேற்கொள்ளப்படும் பணி மற்றும் அரசு நிதியுதவியைக் கொண்டு மேற்கொள்ளும் பணி என்ற வேறுபாடின்றி, திட்டப் பணிகளுக்கு நிருவாக அனுமதி வழங்கும் அதிகார வரம்பினை உயர்த்தக் கோரியுள்ளார்.

3. நகராட்சி நிர்வாக இயக்குநரின் பரிந்துரையை அரசு கவனமுடன் பரிசீலித்து பின்வருமாறு ஆணையிடப்படுகிறது.

நகர் மன்றங்களுக்கும், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்களுக்கும், நகராட்சி நிர்வாக இயக்குநருக்கும் நகராட்சி நிதிகொண்டு மேற்கொள்ளப்படும் பணி, அரசு நிதிகொண்டு மேற்கொள்ளப்படும் பணி என்ற வேறுபாடின்றி திட்டப் பணிகளுக்கு நிருவாக ஒப்புதல் வழங்க இணைப்பில் கண்டவாறு அதிகார வரம்பு உயர்த்தப்படுகிறது.

4. நகராட்சி நடைமுறை நூலில் தொடர்பான தகுந்த திருத்தங்கள் வெளியிடப்படவுள்ளது. அதற்கான கருத்துருக்களை நகராட்சி நிர்வாக இயக்குநர் அரசுக்கு அனுப்பும்படி அறிவுறுத்தப்படுகிறார்.

5. இவ்வாணையின் நகல்களை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்கள் மற்றும் நகராட்சி ஆணையர்களுக்கு அனுப்புமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண் 887/எப்.எஸ்/பி/97, நாள்: 24.2.97-ல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

எஸ். மாலதி,
அரசுச் செயலாளர்.

ஆ.கோ.தொ.க.எண்.13/97/
15587/இ1, நாள்:1.4.97.

இயக்குநர் அலுவலகம்,
உள்ளாட்சி நிதித் தணிக்கை,
குறளகம், 4-வது தளம்,
சென்னை-600 108.

தகவலுக்காகவும் தக்க நடவடிக்கைக்காகவும் நகல் அனுப்பப்படுகிறது.

ஒம்/- ரா. சுரேஷ்,
உதவி இயக்குநர். (ந.ஒ).

**பெறுநர்:**

வகை III -ன்படி.

**நகல்:**

'இ' பிரிவு இ.இ பிரிவு.
இருப்பு கோப்பு இ1 முதல் இ4 முடிய
உபரி 10 நகல்கள்.

/உண்மை நகல்/

ஆய்வாளர்-தலைமையிடம்.

செ.ஆ.74.

## இணைப்பு:

| நகராட்சியின் நிலை | அதிகார அமைப்பின் பெயர் | அதிகார வரம்பு |
|---|---|---|
| சிறப்பு மற்றும் தேர்வு நிலை | நகர் மன்றம் | ரூ. 5.00 லட்சம் வரை |
| | நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் | ரூ. 10.00 லட்சம் வரை |
| | நகராட்சி நிர்வாக இயக்குநர் | ரூ. 100.00 லட்சம் வரை |
| | அரசு | ரூ. 100.00 லட்சம் ~~வரை~~ மேல் |
| நிலை-1 | நகர் மன்றம் | ரூ. 4.00 லட்சம் வரை |
| | நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் | ரூ. 10.00 லட்சம் வரை |
| | நகராட்சி நிர்வாக இயக்குநர் | ரூ. 100.00 லட்சம் வரை |
| | அரசு | ரூ. 100.00 லட்சத்திற்கு மேல் |
| நிலை-2 | நகர் மன்றம் | ரூ. 3.00 லட்சம் வரை |
| | நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் | ரூ. 10.00 லட்சம் வரை |
| | நகராட்சி நிர்வாக இயக்குநர் | ரூ. 100.00 லட்சம் வரை |
| | அரசு | ரூ. 100.00 லட்சத்திற்கு மேல் |
| நிலை-3 | நகர் மன்றம் | ரூ. 2.00 லட்சம் வரை |
| | நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் | ரூ. 10.00 லட்சம் வரை |
| | நகராட்சி நிர்வாக இயக்குநர் | ரூ. 100.00 லட்சம் வரை |
| | அரசு (அரசு) | ரூ. 100.00 லட்சத்திற்கு மேல் |

எஸ். மாலதி,
அரசுச் செயலாளர்.

/உண்மை நகல்/

ஆய்வாளர்-தலைமையிடம்.

செ.ஆ.74